டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

Agridoctor.in | 9.03.2025 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 216 - Madurai | Online Edition

# தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, மார்ச் 8

தமிழகத்தில் நாளை மறுநாள் (11ம் தேதி) 12 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், உள்தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக இன்று (9ம் தேதி) தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும்.



நாளை (10ம் தேதி) கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

11-3-25ல் அநேக இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, விருதுநகர், சிவகங்கை, மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்காலிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

## வேளாண் கல்லூரி மாணவிகள் கொண்டாடிய மகளிர் தினம்



திருச்சி, மார்ச் 8

பெண்கள் இல்லா பிரபஞ்சம் உண்டோ? தாய்மை இல்லா தலைமுறை உண்டோ? மகளிர் தின வாழ்த்துக்கள்.

தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக இறுதியாண்டு வேளாண் மாணவிகள் மார்ச் 8-ஆம் தேதி சர்வதேச மகளிர் தினத்தை மஞ்சல்த்திடல் கிராமத்தில் சிறப்பாக கொண்டாடினர். பாலகிருஷ்ணன் (மஞ்சல்த்திடல் ஊர் தலைவர்) தலைமையில் நடத்தப்பட்ட இவ்விழாவில், வளர்ந்து வரும் தொழிலதிபர்களாக அன்ன மரியாள் (சணல் பொருட்கள் தொழிலதிபர்) மற்றும் கஜப்ரியா (ஹோம் பேக்கிங்) சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். ஸ்ரீதர் (பல்கலைக்கழக உதவி பேராசிரியர்) மற்றும் ஊர் மக்கள் கலந்து கொண்டனர். பெண்களின் சிறப்புகளையும் சுய தொழிலின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்து மகளிர்களை ஊக்கிவித்தனர். மேலும், இவ்விழாவை சிறப்பிக்க சிலம்பப்போட்டி, கோலப்போட்டி மற்றும் இசைநார்காளி போன்ற பல போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டன.

பெண்ணே நீ உனக்கென வாழும் முதல் நாள். உன் விடியலின் முதல் நாள்.

விழாவை இறுதியாண்டு வேளாண் மாணவிகளாகிய அபிநயா, ஆண்டன் பவுலின் மேரி, தாரிணி, ஹரித்தா, ஜோதிபிரியா, கிருத்திகா, லாவண்யா, பிரித்திகா, ரம்யா, செந்தமிழ்சுடர், சுவேதா, விஜயலட்சுமி ஆகியோர் நடத்தினர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# வேளாண்மை அறிவியல் நிலையத்தில்

# உலக மகளிர் தின கொண்டாட்டம்

மதுரை, மார்ச் 8

மதுரை, வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உலக மகளிர் தினத்லத முன்னிட்டு தூய்மைப் பணியாளர்களுக்கான உடல் நலம் மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி 8/3/25 அன்று நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியை திட்ட ஒருங்கிலணப்பாளர் முனைவர் இ.சுப்பிரமணியன் துவங்கி வைத்து தலைமையுரை ஆற்றினார். முனைவர் லூ நிர்மலா, பேராசிரியர் மகளிர் தின முக்கியத் துவத்தையும் சமுதாய முன்னேற்றத்தில் பெண்களின் பங்கு பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

சமுதாய அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மூன்றா ஆண்டு மாணவர்கள் இணைந்து உணவு மற்றும் ஊட்டச்சத்தின் முக்கியத்துவம், உடல் நலப் பராமரிப்பு, சுகாதாரம் மற்றும் மகளிர் நலத்திட்டங்கலளப் பற்றி தூய்மைப் பணியாளர்களுக்கு எடுத்துரைத்தனர். முனைவர் கி ஜோதிலெட்சுமி, இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். உலக மகளிர் தினத்லத முன்னிட்டு விவசாயத்தில் பெண்களின் பங்கை அதிகரிக்கும் நோக்கத்தில் ட்ரோன் செயல் விளக்க பயிற்சி வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சி மிகவும் பயனுள்ளதாக அமைந்தது என்று வருகைப் புரிந்த அனைவரும் கருத்துக்கள் தெரிவித்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# விவசாயிகளின் தரவுகளை சரி பார்க்கும் பணிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் அழைப்பு



மதுரை, மார்ச் 8

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரத்தில் வேளாண்மைத்துறை சார்பில் தமிழ்நாடு நீர்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் 2024-2025ம் ஆண்டு சாத்தையாறு உவபடி நிலப்பகுதியில் கீழ்க்கண்ட மாதிரி கிராமங்களான கல்லணையில் 5.3.25ம் தேதி அன்றும், அழக-ாபுரியில் 6.3.25ம் தேதி அன்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் நடைபெற்றது. இப்பயிற்சியில் 25 முன்னோடி விவாசாயிகள் கலந்து கொண்டனர்.

மேலும் அலங்காநல்லூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெ.தெய்வேந்திரன், பயிற்சியில் அலங்காநல்லூர் பகுதியில் விவசாயிகளின் தரவுகள் சரிபார்க்கும் பணி மேற் கொள்வதாக தெரிவித்தார். இதில் ஒரு அங்கமாக விவசாயி களின் நில உடைமைகளை சரிபார்த்து, பதிவு செய்ய அனைத்து வருவாய் கிராமங்களிலும் ஊராட்சி அலுவலகங்கள் மற்றும் சமுதாய வள பயிற்றுநர் மைய கட்டிடங்களில் முகாம் நடைபெற்று வருவதாகவும், பொதுமக்கள் அதனை பயன் படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

வேளாண்மைத்துறை மூலம் வழங்கப்படும் மானிய திட்டங்கள் மற்றும் இடுபொருட்கள் இருப்பு குறித்தும், அதனை வாங்கி பயன்பெருமாறும் விவசாயிகளை வேளாண்மை அலுவலர் மு.வசந்தகுமார் கேட்டுக்கொண்டார். இப்பயிற்சியில் வேளாண் மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை, மாணவிகள் கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவத்திட்டம் – 2025ன் கீழ் இப்பயிற்சியில் கலந்துக் கொண்டனர்.

இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கும், தொழில் நுட்ப அலுவலர்களும் உதவி வேளாண்மை அலுவலர் விக்னேஷ் நன்றி தெரிவித்தார். திறன் மேம்பாட்டு பயிற்சிக்கான ஏற்பாடுகளை ஆத்மா தொழில்நுட்ப அலுவலர் வேல்முருகன், செளந்தரராஜன், வசந்தி ஆகியோர் மேற்கொண்டனர்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | | 08.03.2025 |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 15 | 20 | 56 | காளான் (சிப்பிபட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 15 | 20 | 57 | உருளை (பிற) | 18 | 22 |
| 1B | கத்திரி(Nadu) | 22 | 28 | 57A | உருளை(ஊட்டி) | 20 | 50 |
| 2 | வெண்டை | 30 | 35 | 58 | மேரக்காய் | 15 | 20 |
| 3 | தக்காளி (நாடு) | 12 | 14 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 20 | 25 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 12 | 16 | 60 | கேரட் | 50 | 55 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 30 | 34 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 48 | 54 |
| 6 | புடலை | 20 | 24 | 62 | நூல்கோல் | 20 | 25 |
| 7 | பீர்க்கன் | 30 | 36 | 63 | டர்னிப் | 34 | 38 |
| 8 | சுரைக்காய் | 10 | 14 | 64 | மு.கோஸ் | 14 | 18 |
| 9 | பாகற்காய் | 25 | 30 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 28 | 32 | 66 | காளிபிளவர் | 25 | 30 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 60 | 65 |
| 12 | அரசாணி | 12 | 15 | 68 | பூண்டு | 80 | 100 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 20 | 26 | 69 | இஞ்சி | 40 | 50 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 24 | 28 | 70 | புருக்கோலின் | 90 | 100 |
| 15 | சி.வெங்காயம் | 32 | 38 | 71 | பென்னி பீன்ஸ் | 50 | 55 |
| 16 | பெ.வெங்காயம் | 30 | 35 | 72 | குடமிளகாய் | 40 | 46 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 20 | 25 | 73 | ஊட்டி அவரை | 100 | 110 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 55 | | | | |
| 19 | முருங்கை | 60 | 65 | | | | |
| 20 | தேங்காய் | 58 | 62 | | | | |
| 21 | மாங்காய் | 60 | 90 | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 40 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 48 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 58 | 62 | 75 | எலுமிச்சை | 70 | 80 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 58 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 35 | 40 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 70 | 76 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 32 | 35 | 80 | திராட்சை | 90 | 100 |
| 30 | புதினா | 5 | 6 | 81 | மாம்பழம் | 120 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 220 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்ச் | 80 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயக்கீரை | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 40 | 60 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 30 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 70 | 74 |
| 40 | கோவக்காய் | 30 | 34 | 91 | பூவன் | 40 | 44 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 55 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 44 | 48 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 35 | 40 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 12 | 16 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 28 | 32 | 96 | நேந்திரன் | 60 | 65 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 16 | 20 | 97 | செவ்வாழை | 95 | 100 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 20 | 25 | 100 | கறிப்பலா | 40 | 45 |
| 50 | நிலக்கடலை | 60 | 64 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 25 | 30 | 102 | நெல்லிக்காய் | 70 | 75 |
| 52 | புளி | 135 | 145 | 103 | Seedless திராட்சை(ப/க) | 120 | 160 |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 27 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 16 | 20 | | | | |
| 55A | துவரை | 0 | 0 | | | | |

# வேப்பனப்பள்ளி வட்டார விவசாயிகளுக்கு நவீன கரும்பு சாகுபடி குறித்த பயிற்சி



கிருஷ்ணகிரி, மார்ச் 8

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப் பள்ளி வட்டாரத்தில் வேளாண்மைத்துறை மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் (அட்மா) கீழ் வேப்பனப்பள்ளி வட்டார பகுதி விவசாயிகளுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் சிவநதி தலைமையில் நவீன கரும்பு சாகுபடி குறித்து கரும்பு ஆராய்ச்சி நிலையம், மேலாலத்தூர் இடத்திற்கு உள் மாநில விவசாயிகள் பயிற்சிக்கு 40 விவசாயிகளை அழைத்து செல்லப்பட்டது.

இப்பயிற்சியில் கரும்பு ஆராய்ச்சி நிலையம், மேலாலத்தூர், இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர் சரவணன் பங்கேற்று நீடித்த நிலையான கரும்பு சாகுபடி முறையானது குறைந்த அளவு விதை விதை நாற்றுகள், குறைந்த அளவு தண்ணீர், சரியான அளவு ஊட்டச்சத்து மற்றும் முறையான பயிர் பராமரிப்பின் மூலம் அதிக மகசூல் பெறும் வழிமுறையாகும். நீடித்த நிலையான கரும்பு சாகுபடி முக்கிய கோட்பாடுகள், ஒரு விதைப்பரு சீவல்களிலிருந்து நாற்றங்கால் அமைத்தல், இளம் நாற்றுகளை நடவு செய்தல், நீடித்த நிலையான கரும்பு சாகுபடியின் பயன்கள் – விதைக்கரணை களுக்கான செலவு 75 சதவீதம் வரை குறைகின்றது. சீவல்களை வெட்டி எடுத்த பின்பு உள்ள கரும்புகளை அரவைக்கு பயன்படுதத்தலாம், விதை முளைப்புதிறன் அதிக அளவு உள்ளது. நாற்றுகளை அதிக தூரம் எடுத்து செல்வது எளிது, கரும்பின் நீளம் மற்றும் எடை கூடுதலாக கிடைக்கிறது. தண்ணீர் உபயோகிப்பு திறன் கூடுகிறது, சர்க்கரை கட்டுமானம் அதிகரிக்கிறது. பயிர் சாகுபடி காலம் காலம் குறையும், மொத்த சாகுபடி செலவு குறைகிறது. ஊடுபயிர் மூலம் இரட்டை வருமானம் கிடைக்கிறது என்று தெளிவாக கூறினார். கேத்தாண்டப்பட்டி திருப்பத்தூர் சக்கரை ஆலை யோகநாதன், சாந்தன், தனிகைநாதன் விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலையின் முக்கியத்துவம் மற்றும் பயன்கள், விவசாயிகளிடமிருந்து கரும்பு வாங்குதல், வெல்லம் தயாரித்தல் குறித்து விவசாயிகளுக்கு தெளிவாக கூறினார்கள்.


100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின்
தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம்
குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721

# விதைச்சான்று பணிகளை விதைச்சான்றளிப்பு இணை இயக்குநர் ஆய்வு




மதுரை, மார்ச் 8

தமிழக விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையின் விதைச்சான்று இணை இயக்குநர் வீ.தபேந்திரன், மதுரையில் செயல் படுத்தப்படும் விதைச்சான்று மற்றும் உயிர்மச்சான்று பணிகளை கள ஆய்வு செய்தார்.

மதுரை வேளாண் கல்லூரியில் நெல் ADT 57 மற்றும் ADT 58 இரக ஆதார நிலை விதைப்பண்ணைகளை கள ஆய்வு செய்தார். கலவன்களை முறையாக அகற்றி இனத்தூய்மையை பாதுகாத்து விதைத்தரத்தினை தக்கவைக்குமாறும் அறிவுரை வழங்கினார். மேலும் வேளாண் கல்லூரியின் விதை சுத்திகரிப்பு நிலையத்தில் நடைபெற்ற நெல் ADT 37 இரக விதை சுத்தி பணியினை பார்வையிட்டார். சுத்தி நிலையங்களை சுத்தமாக பராமரிக்கவும், சுத்திகரிப்பு செய்யும் சல்லடைகளை முறையாக சுத்தம் செய்யவும், சுத்தம் செய்த விதையினை சரியான அளவில் சாக்குப்பைகளில் நிரப்பி விதைச்சான்றளிப்பு முறை களின்படி தரத்தினை பரிசோதனை செய்து சான்றட்டை பொருத்துமாறும் அறிவுறுத்தினார்.

உலகனேரியில் அமைந்துள்ள KVPS அங்ககப்பண்ணை யினை பார்வையிட்டார். பண்ணையில் அங்கக முறையில் சாகுபடி செய்யப்படும் வாழை, கொய்யா, மற்றும் வெண்டை, முள்ளங்கி, கத்திரி உள்ளிட்ட காய்கறி பயிர்களை பார்வை யிட்டார். சந்தை விலையில் உள்ளூரில் மட்டும் விற்பனை செய்வதை தொடர்ந்து இணையதளம் மூலம் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் விற்பனை செய்திட அறிவுரை வழங்கினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம் முறையாக தலைக் கவசம் அணிவோம்**

விதை விற்பனை நிலையங்களில் ஆய்வு செய்த போது பூச்சி மருந்துகளும், விதைகளும் ஒரே கிட்டங்கியில் இருப்பு வைக்கப் பட்டிருந்தற்காக கிட்டங்கியில் இருப்பு வைக்கப்பட்டிருந்த ரூ.2,38,870 மதிப்புள்ள 3493.5 கிலோ எடை உள்ள நெல் மற்றும் காய்கறி விதைகளுக்கு விற்பனை தடை விதிக்கப் பட்டுள்ளது. விதை உரிமத்தினை 15 நாட்கள் தற்காலிகமாக முடக்கம் செய்ய உத்தரவிட்டார்.

மேலும் உரம், பூச்சி மருந்து மற்றும் விதைகளை தனித்தனி கிட்டங்கிகளில் இருப்பு வைக்கப்பட வேண்டும் என்றும் விதை சட்டம் 1966 மற்றும் விதைகள் விதிகள் 1968 விதைகள் கட்டுப்பாட்டு ஆணை 1983-ன் படி எவ்வித விதிமீறல் இல்லாமல் விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும் எனவும் ஆவணங்களை முறையாக பராமரித்து விவசாயி களுக்கு ரசீது சரியான முறையில் கொடுத்தும் விதைகளை விற்பனை செய்ய வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

வாடிப்பட்டி பகுதியில் அமைக்கப்பட்ட நெல் விதைப்பண்ணை களில் ஆடுதுறை 37 மற்றும் ஜோதி போன்ற இரகங்களை ஆய்வு செய்து விதைப்பண்ணைகளில் கலவனின்றி இரகத்




தூய்மையை பராமரிக்கும்படி விதைச்சான்று அலுவலர்களை அறிவுறுத்தினார். பிரிமீயர் சீட்ஸ் என்ற தனியார் விதை சுத்தி நிலையத்தை பார்வையிட்டார்.

விதைச்சான்று அலுவலர்களுக்கு சரியான முறையில் சுத்தி செய்து விதைக்கழிவுகளை முறையே அகற்றி விதைத்தரம் பேண கேட்டுக்கொண்டார். கிட்டங்கிகளில் விளக்குப்பொறி அமைத்து அந்துப்பூச்சிகளை கட்டுப்படுத்துமாறு எடுத்துரைத்தார்.

நாகமலை புதுக்கோட்டையில் இயங்கி வரும் விதைப் பரிசோதனை நிலையத்தில் விதைப்பரிசோதனை முறைகள் மற்றும் ஆய்வக கருவிகளின் செயல்பாட்டினை ஆய்வு செய்தார்.

விதை மாதிரிகளின் தரம், முளைப்புத்திறன், ஈரப்பதம், புறத்தூய்மை, பிற ரக கலப்பு, சோதனைகள் குறித்தும்




கேட்டறிந்தார். விதை மாதிரிகளை சரியான முறையில் பகுப்பாய்வு செய்த பின்னர், காலதாமதமின்றி, உரிய நேரத்தில் பரிசோதனை முடிவுகளை விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும் எனவும், விதைப்பரிசோதனையின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு, பத்திரிக்கை, வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அறிவுறுத்தினார்.

ஆய்வின் போது விதை ஆய்வு துணை இயக்குநர் வாசுகி, விதைச்சான்று உதவி இயக்குநர் சி.சிங்காரலீனா, விதைப்பரிசோதனை அலுவலர் மகாலெட்சுமி மற்றும் வேளாண் அலுவலர்கள், விதைச்சான்று அலுவலர்கள், விதை ஆய்வாளர்களும் உடனிருந்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# விவசாயிகளுக்கு உதவும் கிசான் இ-மித்ரா செயலி




கிசான் இ-மித்ரா ( KISSAN-E- MITRA) எனப்படும் செயற்கை நுண்ணறிவு ( ARTIFICIAL INTELLIGENC) அடிப்படையிலான சாட்பாட் இ விவசாயிகளுக்கான சிறந்த தீர்வுகளை வழங்குகிறது. இது விவசாயிகளுக்கான தொழில்நுட்ப உதவியுடன் இணைக்கும் ஒரு செயல்பாட்டு கருவியாக செயல்படுகிறது. ஆக இதுபோன்ற நடைமுறைகளை மத்திய வேளாண் மற்றும் விவசாய நலத்துறை இணை அமைச்சர் ராம் நாத் தாக்கூர் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**விவசாயிகளுக்கு ஏற்படும் பயன்பாடு?**

1) பி.எம் கிசான் திட்டம் ( PM- KISSAN ) நிதி உதவிக்கான விவரங்களை அறிந்து கொள்ள முடியும்.

2) விவசாய திட்டங்கள்- பயிர் காப்பீடு (PMFBY) கிரெடிட் கார்டு (KCC) போன்ற திட்டங்களின் தகவல்கள் மற்றும் விண்ணப்ப செயல் முறைகள்.

3) மண் வளம், காலநிலை மற்றும் பருவத்தை அடிப்படையிலான பயிர் பரிந்துரை.

4) விவசாய வழிகாட்டுதல்.

**பூச்சி மேலாண்மை, சந்தை விலை மற்றும் பாசன முறைகள்**

விவசாயிகள் எளிதாக பயன்படுத்த கூடியதாகவும், பல்வேறு திட்டங்கள் மற்றும் நேரடியாக அணுகும் வரையிலும் வடிவமைக்கப்பட்டது. காலநிலை மாற்றத்தால் விளைப் பொருட்கள் இழப்பை சமாளிக்க, தேசிய பூச்சி கண்காணிப்பு, பயிர் பிரச்சனைகளில் பூச்சி தாக்குதலைக் கண்டறிய AI மற்றும் இயந்திர கற்றலை பயன்படுத்தப்படுகிறது. நெல் மற்றும் கோதுமை பயிர்களுக்கான செயற்கை கோள், வானிலை மற்றும் மண் ஈரப்பத தரவுத் தொகுப்பைகளை பயன் படுத்தி செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான பகுப்பாய்வு மற்றும் பயிர் சுகாதார கண்காணிப்பு மேற்கொள்ள உதவுகிறது.

இந்த சாட்பாட் விவசாயிகளின் கேள்விகளுக்கு அவர்களது தாய் மொழியில் உடனடியாக பதில்கள் வழங்க வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**வேறென்ன இதிலுள்ள பயன்பாடுகள்?**

11 மண்டல மொழிகளில், தமிழ், இந்தி, ஆங்கிலம், மளை-யாளம், கன்னடம், பெங்காலி, தெலுங்கு, மாரத்,தி ஓடியா, பஞ்சாபி மற்றும் குஜராத்யில் தற்போது இச்சேவை வழங்கப் படுகிறது.

**எப்படி இதனை உபயோகிப்பது?**

விவசாயிகள் தங்களுடைய அலைபேசியில் உள்ள கூகுள் பிளே ஸ்டோரில் இருந்து இ கிசான்- இ- மித்ரா செயலியை (APP) பதிவிறக்கம் செய்ய வேண்டும். சாட்பாட்டில் (CHAT-




BOT.AI) கேள்விகளைப் பதிவிட்டு உடனடியாக பதில்களை பெறலாம். விரைவில் பிற மாநில மொழிகளில் விரிவுபடுத்த பட உள்ளது. கீசான்- இ - மித்ரா விவசாயிகளுக்கு நேரம் மற்றும் செலவுகளை மிச்சப்படுத்தி, விவசாயத்தில் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான முக்கிய அடித்தளமாக விளங்குகிறது.

விவசாயிகளுக்கு பயனுள்ள தீர்வுகளை தருவதோடு மட்டுமல்லாமல், பல்வேறு திட்டங்களைப் பற்றிய முழுமை யான விளக்கத்தையும் வழங்கிறது இந்த சாட்பாட் இ.மித்ரா.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# மக்காசோள பயிரில் பண்ணை பள்ளி



சேலம், மார்ச் 8

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வேளாண்மை உழவர் நலத் துறை அட்மா திட்டத்தின் கீழ் உலிபுரம் கிராமத்தில் மக்கா சோள பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை என்ற தலைப்பில் பண்ணை பள்ளி முதல் வகுப்பு நடத்தப்பட்டது.

வேளாண்மை உதவி இயக்குநர் மோகன சரிதா கலந்து கொண்டு உழவர்களுக்கு மண் மாதிரி எடுக்கும் முறைகள் பற்றி




செயல் விளக்கம் செய்து காட்டினார், மற்றும் பயிர் பாதுகாப்பு நாட்காட்டி வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

மக்கள் நல சங்கம் தொண்டு நிறுவனர் வெங்கடாசலம் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு அடியுரம் இடுதல் மற்றும் வேப்பம் புண்ணாக்கு இடுதல் பற்றி எடுத்து கூறினார்.

துணை வேளாண்மை அலுவலர் ஜெயராமன் கலப்பின மக்காசோள நன்மைகள் பற்றி எடுத்து கூறினார். முன்னதாக வட்டார தொழில்நுட்ப மேலாளர் அற்புத வேலன் வரவேற்று பேசினார். முன்னோடி விவசாயிகள் ரவிசந்திரன், கலைவாணன் கலந்து கொண்டனர்.

நிகழ்சிக்கான ஏற்பாட்டினை உதவி தொழில்நுட்ப மேலாளர் சங்கர் செய்திருந்தார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின்
தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம்
குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721

# விதை மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த விதை நேர்த்தி செய்வது எப்படி?



விருதுநகர், மார்ச் 8

விருதுநகர் மாவட்டம், நரிக்குடி வட்டாரத்திலுள்ள சேவையூர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் அங்கமான அக்ரி கிளினிக்-யின் வேளாண் ஆலோசகர் சந்திர சேகரன், தனது களப்பயணத்தின் போது தெரிவித்தாதவது,

தற்போது மாசி பட்ட நிலக்கடலை சாகுபடிக்கான வேலைகள் நரிக்குடி மற்றும் காரியாபட்டி வட்டாரத்திலுள்ள இறவை பாசன வசதியுள்ள விவசாயிகள் தீவிரமாக செய்து வருகின்றனர்.

அவர்களுக்கு தேவையான விதை பருப்பு மற்றும் விதை நேர்த்தி முறை பற்றி இன்று குறவைக்குளத்தில் முன்னோடி விவசாயி சசிகுமார், அண்ணாத்துரை மற்றும் இராம லட்சுமி நிலத்தில் விதையுடன் (பருப்பு) டி.விரிடி கலந்து செயல்விளக்க மாக செய்து காட்டப்பட்டது. அப்போது கூறுகையில், நிலக்கடலை பருப்பு விதைமூலமாக பரவக்கூடிய பூஞ்சான நோய்களை (FUNGUS) கட்டுப்படுத்த விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

விதை மூலமாக பரவும் இலைக்கருகல், குச்சி நோய் என்ற பியூசோரியம், வேர் வாடல் போன்ற நோய்களை கட்டுப்படுத்த ஒரு கிலோ பருப்புக்கு 4கிராம் டி.விரிடி, கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து விதைக்க வேண்டுமென கூறினார். ஒரு ஏக்கர் விதைக்கு விதை நேர்த்தி செய்ய 60-80 ரூபாய் மட்டுமே செலவாகும். ஆனால் விதை நேர்த்தி செய்வதால், பயிர் வளர்ச்சி காலத்தில் தாக்குதல் குறைவாக இருக்கும். அவற்றை கட்டுப் படுத்த அதிக மருந்து தெளிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது என்றார். அத்துடன் நிலக்கடலைக்கு, ரைசோபியம் கல்சர், பாக்கெட்டை ஆறிய வடி கஞ்சியில் கலந்து அதனுடன் பூஞ்சான விதை நேர்த்தி செய்யப்பட்ட விதைப்பருப்பை கலந்து நிழலில் 30 நிமிடம் உலர்த்தி விதைக்க வேண்டும்.

நிலக்கடலையில் முளைப்பு பாதிக்காத வண்ணம் செய்ய வேண்டும். லேசாக பருப்பின் மீது விரல் நகக்கிறல் பட்டால் கூட

முளைப்பு பாதிக்கும். ரைசோபியம் விதை நேர்த்தி செய்ய வாய்ப்பு இல்லாத விவசாயிகள் அதனை மக்கிய சாண எருவுடன் கலந்து நீர் தெளித்து ஒரு நாள் வைத்திருந்து ( INCREASING MICRO ORGANISM COUNT ) மறுநாள் நிலக்கடலை செடி உள்ள நிலத்தில் இடலாம். உயிர் உர விதை நேர்த்தி செய்வதால் நிலக்கடலை செடியின் வேர்மூடிச்சு முலமாக காற்றில் உள்ள நைட்டிஜன் ( N ) கிரகித்து பயிர்களுக்கு கொடுப்பதால் இசெடி நன்றாக வளர்ப்பவதுடன் அதிக மகசூல் கிடைக்கும்.

எனவே மாசிபட்ட நிலக்கடலை சாகுபடிக்கு அனைத்து விவசாயிகளும் விதைநேர்த்தி செய்து விதைப்பிற்கான விழிப்புணர்வு முகாம் கிராமந்தோறும் அக்ரி சி.ஆர்.பி மற்றும் அக்ரிகிளினிக்–யின் கள பணியாளர்களால் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. விவசாயிகளிடமிருந்து விளைபொருட் களான பாரம்பரிய நெல் மற்றும் மக்காசோளம், நிலக்கடலை,




எள் போன்றவைகள் அதிகமாக வாங்கி அதனை மதிப்புக் கூட்டப் பட்ட பொருளாக மாற்றி விற்பனை செய்வதற்கான ஏற்பாடு களை FPO செயல் அலுவலர் பார்த்த சாரதி செயல்படுத்தி வருகிறார். மேலும் பனைக்குடி குறவைகுளம் சொட்ட முறி கல்யாணிபுரம் முக்குளம் தொட்டியான்குளம் நாசர் புளியங் குளம் அரசகுளம் விவசாயிகள் தங்களுடைய விளைப் பொருட்களை கொண்டு வந்து விற்பனை செய்கிறார்கள். இதுபோல மற்ற விவசாயிகளும் நல்ல விலை கிடைக்க இங்கு விற்பனை செய்ய வேண்டும் என்றார். இந்த அக்ரி கிளினிக்யின் செயல்பாடுகளை சிசிடி நிர்வாக இயக்குநர் பத்மாவதி திட்ட இயக்குநர் ஜான் பிரிட்டோ வழிகாட்டுதலின் பேரில் நடைபெற்ற வருவதாக தெரிவித்தார்.

மாசிபட்ட பயிர்களுக்கான விதை நேர்த்தி விழிப்புணர்வு செயல் விளக்கம் முகாம் காலை – மாலை வேளையில் நடைபெற்ற வருவதாக தெரிவித்தார். இதற்கான ஏற்பாடுகளை கள பணி யாளர்கள் பிரியா மற்றும் பரதன் சிறப்பாக செய்திருந்தனர்.

# பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு நடத்திய தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகள்



திண்டுக்கல், மார்ச் 8

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரத்தில், கிராம மக்களுடன் பங்கேற்பு கிராமப்புற மதிப்பீட்டை, பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகளான மாதங்கி, மீரா ஜாஸ்மின், மௌனிதா, நர்மதா, நசிஹா, நிலா, செ.மீ.நித்ய ஸ்ரீ, மு.நித்ய ஸ்ரீ, பத்ம ஸ்ரீ மற்றும் பொன் எழில் ஆகியோர் தோட்டக்கலை பணி அனுபவ திட்டத்தின் அங்கமாக ரெட்டியார் சத்திரத்தில் தங்கி, திறனாய்வு மற்றும் கள பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், உள்ளூர் பிரச்சினைகள் மற்றும் முதன்மையானவற்றைப் புரிந்து கொள்ள காலக்கோடு, டிரான்செக்ட் நடை, வென் வரைபடம், பிரச்சனை மரம் போன்ற நுட்பங்களைப் பயன்படுத்தி மேலும் தகவலறிந்த வளர்ச்சித் திட்டமிடலை செயல்படுத்தினர்.

# பெண்கள் தினத்தை முன்னிட்டு விளையாட்டு போட்டி நடத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்



இராமநாதபுரம், மார்ச் 8

தேசிய பெண்கள் தினத்தை முன்னிட்டு பார்த்திபனூர் கிராமத்தில் நம்மாழ்வார் வேளாண்மை கல்லூரி மாணவர்கள் ஊர் பெண் களுக்கு நிறைய விளையாட்டு போட்டிகள் நடத்தினர். இதில் ஊர் மக்கள் அனைவரும் ஆனந்தமாய் பங்குபெற்றனர். கலந்து கொண்ட அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து விவசாயத்தில் பெண்களின் பங்கு குறித்து மாணவர்கள் உரையாடினர். இதில் அனைத்து பெண்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்து உள் மாநில விவசாயிகள் பயிற்சி



கிருஷ்ணகிரி, மார்ச் 8

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டாரம், வேளாண்மை துறை மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு (அட்மா) திட்டத்தின் கீழ் கோயம்புத்தூரில் அமைந்துள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திற்கு ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த பயிற்சிக்கு சூளகிரி வட்டத்திலிருந்து விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டனர்.

அங்கு முனைவர்கள் கதிரவன், திருநாவுக்கரசு, பூமிராஜ், ராம் பிரவீன் உதவி வேளாண்மை அலுவலர் ராஜா ஆகியோர் கூறியதாவது ஒருங்கிணைந்த பண்ணைய முறைகள் குறித்த அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டம் நாட்டில் செயல்படுத்தப்படும் மிகப்பெரிய திட்டங்களில் ஒன்றாகும். இந்த திட்டம் 1956-57 ஆம் ஆண்டில் மண் வளம் மற்றும் உர பயன்பாட்டு திட்டத்தின் தொடர்ச்சியாக நாட்டின் அனைத்து வேளாண்-சூழலியல் பகுதிகளிலும் மையங்களுடன் தொடங்கப்பட்டது.

தமிழ்நாட்டில், AICRP-IFS, கோயம்புத்தூரில் உள்ள முதன்மை மையம் (வேளாண் அறிவியல் துறை, TNAU), தஞ்சாவூரில் உள்ள துணை மையம் (மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிறுவனம்), ஏத்தாப்பூரில் (மரவள்ளிக்கிழங்கு மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம்) இரண்டு OFR மையங்கள் மற்றும் பவானிசாகர் (வேளாண் ஆராய்ச்சி நிலையம்) ஆகியவற்றுடன் செயல்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த பண்ணைய முறை குறித்த அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டம் 1973 முதல் கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் வேளாண் அறிவியல் துறையில் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் மேற்கு மண்டலத்தின் சிறு விவசாயிகளுக்கு பாசன வறண்ட நிலங்களுக்கு பொருத்தமான பயிர் முறையை உருவாக்கு வதையும், தமிழ்நாட்டின் மேற்கு மண்டலத்தின் பாசன வறண்ட

நிலங்களுக்கு ஒருங்கிணைந்த பண்ணைய முறை மாதிரியை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்ட கோயம்புத்தூரில் உள்ள AICRP-IFS, முதன்மை மையம் ஆராய்ச்சி நடத்தியது.

மேலும் பால் பண்ணை (2 பசுக்கள் மற்றும் ஒரு கன்று) – ஆடு வளர்ப்பு (10+1) – உயிர்வாயு – மண்புழு உரம் ஆகியவற்றை IFS இல் கூறுகளாக ஏற்றுக்கொள்வதன் மூலம், 1.20 ஹெக்டேர் பண்ணை அலகிலிருந்து ஆண்டுக்கு 2,92,702 நிகர வருமானத்தை ஈட்ட முடிந்தது. பயிர்ச்செய்கை கூறு 94588 நிகர வருமானத்தைப் பதிவு செய்தது. பால் பண்ணை மற்றும் ஆடு அலகு முறையே 91986 மற்றும் 66389 நிகர வருமானத்தைப் பதிவு செய்தது. 2 X 3 உயிர்வாயு அலகில், 498 லிட்டர் மண்ணெண்ணெய்க்கு சமமான 657 X 3 உயிர்வாயு உற்பத்தி செய்யப்பட்டது. கால்நடை கழிவுகள் மற்றும் பயிர் எச்சங்களை மறுசுழற்சி செய்வதன் மூலம் மண்புழு உர அலகிலிருந்து 14.1 டன் மண்புழு உரம் உற்பத்தி செய்யப்பட்டு பயிர் கூறுகளில் மறுசுழற்சி செய்யப்பட்டது என்று விளக்கி கூறினார். இப்பயிற்சிக்காண ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர் பிரியா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் கா.ம.முஹம்மது ரஃபி மற்றும் பி.பழனிச்சாமி ஆகியோர் செய்திருந்தனர்.

## காலநிலையை மீட்டெடுப்பதில் விவசாயம் மற்றும் விவசாயிகளின் பங்கு பற்றிய கலந்துரையாடல் கூட்டம்



தேனி, மார்ச் 8

தேனி மாவட்டம், விடியல் நிறுவனம், சுற்றுச்சூழல் மற்றும் வாழ்வாதார பாதுகாப்பிற்கான காலநிலை மாற்றத்திற்கேற்ப தரிசு நில மேம்பாடு என்ற திட்டத்தின் கீழ் விவசாயிகளிடம் விழிப்புணர்வு மற்றும் கலந்துரையாடல் கூட்டத்தை நடத்தியது. கூட்டம் காலை 10.30 மணிக்கு மு.காமராஜ், நிறுவனர் விடியல், வரவேற்புடன் துவங்கியது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# திருச்சியில் விவசாயிகளுக்கான அக்ரிஸ்டாக் திட்டம் [Agristack] தொடக்கம்!



திருச்சி, மார்ச் 8

விவசாயிகளுக்கான அக்ரிஸ்டாக் திட்டத்தின் (AGRISTACK) மூலம் அரசின் மானியத் திட்டங்கள் மற்றும் பலன்களை விவசாயிகள் பெற ஒரு தனிப்பட்ட அடையாள எண் விவசாயிகளுக்கு உருவாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டமானது உற்பத்தி முதல் சந்தைப்படுத்துதல் வரையுள்ள அனைத்து தரவுகளையும் சேமிக்கும் நோக்கில் உருவாக்கப்படுகின்றன.

இதன் ஒரு அங்கமாக, திருச்சி மாவட்டம், கொடியாலம் வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்கு இத்திட்டமானது திறம்பட செயல்பட விவசாயத்துறை உதவி இயக்குநர் சிவக்குமார் தலைமையில் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலுள்ள விவசாயிகளின் தரவுகள் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றார்கள். இத்திட்டத்தின் கீழ் வட்டார வேளாண் அதிகாரிகள் மற்றும் துணை வேளாண் அதிகாரிகள் வெற்றிகரமாக பணியாவருகின்றனர். அவர்களிடமிருந்து கிராம தங்கல் திட்டத்தின் (RAWE) கீழ் பயிற்சி பெறும் சமயபுரத்தைச் சேர்ந்த தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்களான மு.அபிநயா மற்றும் செ.அருள்லெட்சுமி ஆகியோர் அக்ரிஸ்டாக் திட்டத்தின் (AGRISTACK) பயன்கள் மற்றும் முக்கியத்துவத்தைப் பற்றி அறிந்து கொண்டு விவசாயிகளுக்கு எடுத்துரைத்து, இத்திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் பலன்கள் பற்றி விவசாயிகளிடம் விழிப்புணர்வையும் ஏற்படுத்தினர்.

விவசாயிகள் அந்தந்த வட்டார வேளாண் அலுவலர்களைத் தொடர்புக் கொண்டு இத்திட்டத்தில் இணைந்து விவசாயம் சார்ந்த திட்டங்கள் மற்றும் சேவைகளைத் தடையின்றி பெற இப்போதே பதிவு செய்யுங்கள்...!!! அக்ரி ஸ்டாக் (AGRISTACK) திட்டத்தில்!

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# காலநிலை மாற்றத்தின் தாக்கம் குறித்தும், அதைத் தடுப்பதற்கான வழிமுறைகள்

மதுரை, மார்ச் 8

எல்லோருக்கும் பொதுவானது இந்த உலகம். எல்லா உயிர்களும் தாங்கள் வாழ்வதற்கான சூழ்நிலையை தங்கள் பங்கேற்புடன் மேம்படுத்தி வாழ வேண்டும். இதில் மற்ற உயிரினங்கள் தங்கள் பங்களிப்பை சிறப்பாக செய்துக் கொண்டு வரும் நிலையில் மனித இனம் மட்டும் வாழும் சூழ்நிலையை முன்னேற்றம் என்ற பெயரில் சிறிது சிறிதாக அழிவுகளை ஏற்படுத்தி, உயிர்கள் வாழத்தகுதியில்லாத பூமியாக மாற்றிக் கொண்டு வருகிறான். இந்நிலையில் தன் தவறை திருத்தி ஆரோக்கியமான பூமியாக மாற்ற வேண்டும்.

இயற்கை ஒவ்வொரு உயிரினங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தயாராக உள்ளது. பேராசையை அல்ல. எல்லா உயிர்களுக்கும் அடிப்படை உணவுத் தேவை. அத்தேவையை விவசாயிகள் பூர்த்தி செய்து வருகிறார்கள். விவசாயிகளையும், விவசாயத்தையும் மேம்படுத்துவதில் அனைவரும் உறுதுணை யாக இருந்து செயல்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

காலநிலை மாற்றத்தின் தாக்கம் குறித்தும், அதைத் தடுப்பதற்கான வழிமுறைகள் மற்றும் திட்ட செயல்பாடுகள் குறித்தும் வினோபாலாஜி, திட்ட இயக்குநர், விடியல் பிபிடி மற்றும் காணொளி காட்சிகளின் வாயிலாக விளக்கமாக எடுத்துக் கூறினார்.

ஓடம் தொண்டு நிறுவன இளங்கோ, பேசும் பொழுது கரித் துகள்களில் இருந்து பெறப்படும் பயோசார் தயாரித்து மண்வளம், மண் ஈரப்பதம் காத்து விவசாயத்தையும், விளைச் சலையும் மேம்படுத்தலாம் என விளக்கமாக எடுத்துக் கூறினார்.

கண்ணன், பேராசிரியர், வேளாண் ஆராய்ச்சி மையம், காலநிலை மாற்றத்தை மேம்படுத்த நமது முன்னோர்களின் பாரம்பரிய விவசாயம் அதாவது விவசாயத்தோடு எவ்வாறு வேளாண் காடுகள், உயிர் வேலிகள் அமைப்பது என்றும் அதனால் காலநிலையை எவ்வாறு மீட்டெடுக்கலாம் என்றும் தெளிவாகக் கூறினார்.

ஆ.ஜோதிபாஸ், பேராசிரியர், சேது பொறியியல் கல்லூரி, விவசாயம் முன்னர் ஆரோக்கியம் சார்ந்து இருந்தது. ஆனால் இப்பொழுது விவசாயம் வியாபாரமாக மாறிவிட்டது. இதனால் சுற்றுச்சூழல் மற்றும் மனிதன் ஆரோக்கியம் கேள்விக்குறியாக உள்ளது. எனவே விவசாயத்தை கல்வியுடன் இணைந்து செயல்படுத்த வேண்டும் என்றும் தங்களது கல்லூரி மாணவர்களையும் இத்திட்டத்தில் இணைத்து செயல்படுத்த ஆர்வம் தெரிவித்தார். மு.காசிராஜ், திட்ட ஒருங்கிணைப்பாளர் நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்துத் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் 45-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டார்கள். மு.புஷ்பராஜ், திட்ட மேற்பார்வையாளர் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

# இயற்கை வேளாண்மை குறித்து பயிற்சிப் பெற்ற வேளாண் கல்லூரி மாணவர்கள்





திருச்சி, மார்ச் 8

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி பகுதியில் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் தங்கிப் பயிற்சி பெறும் எம்.ஆர்.பாளை-யத்தைச் சேர்ந்த நாளந்தா வேளாண்மைக் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்களான வி.அபிதரன், த.தேவா, மா.க.எழிலரசன், க.பரத், ந.தீபன் ராஜ், சி.தினேஷ் குமார், தி.ஞானவேல், மு.குருபிரசாத், ரா.ஹனீப்முஹம்மது, பி.ஹரி ஸ்ரீ மற்றும் ம.இள.இளங்குமரன் ஆகியோர் செம்பரை கிராமத்தின் இயற்கை வேளாண்மை விவசாயி ஜோதி பாசுவிடம் பயிற்சி பெற்றனர். அவர், இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவம் மற்றும் அதனால் கிடைக்கும் நன்மைகளைப் பற்றி மாணவர்களுக்கு தெளிவாக எடுத்துரைத்தார். மேலும் பஞ்சகவ்யம், ஜீவாமிர்தம் மற்றும் திறன்மிகு நுண்ணுயிரி (A) அவற்றின் தயாரிப்பு முறை பற்றியும், பயன் குறித்தும் விளக்கம் அளித்தார். வரும் சந்ததியர்களுக்கு இயற்கை விவசாயம் மிகவும் முக்கியமானது என்பதனை விளக்கமாக கூறினார்.

# சென்னசமுத்திரம் விவசாயிகளுக்கு வேளாண் சுற்றுச்சூழல் பகுப்பாய்வு பண்ணை பள்ளி



இராணிப்பேட்டை, மார்ச் 8

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டாரம், சென்ன சமுத்திரம் – கன்னிகாபுரம் கிராமத்தில் விவசாயிகளுக்கு, வேளாண்மை இணை இயக்குனர், அசோக் குமார் தலைமையில் வேளாண் சுற்றுச்சூழல் பகுப்பாய்வு பண்ணை பள்ளி நிகழ்ச்சி நடைபெற்றது.

வேளாண்மை இணை இயக்குனர் பேசுகையில், நெற்பயிரில் இயற்கை சூழல் முறை ஆய்வு செய்வது குறித்தும், விதை முதல் அறுவடை வரை இரசாயனமின்றி எவ்வாறு தொழில்நுட்பங்களை பின்பற்றுவது குறித்தும், பயிர்களை தொடர்ந்து கண்காணித்து, நன்மை செய்யும் பூச்சிகள் பாதிப்பு அடையாமல் தீமை செய்யும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் தொழில்நுட்பங்கள் குறித்தும் விளக்கினார். அதனைத் தொடர்ந்து வேளாண்மை உதவி இயக்குனர், திலகவதி, நிலங்களில் வளமான பயிர்களை உருவாக்க பசுந்தாள் உரங்களான சணப்பை, தக்கைபூண்டு ஆகியவற்றைக் கொண்டு மண்ணை பேணிப் பாதுகாக்கும் முறைகளையும், மண் வளத்திற்காக மண்புழு உரம் மற்றும் தொழு உரங்களை பயன்படுத்தும் முறைகள் குறித்தும், அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா போன்றவற்றின் மூலம் காற்றில் உள்ள நைட்ரஜனை மண்ணிற்கு கொண்டு வரும் முக்கியத்துவம் குறித்தும், இயற்கை சூழல் முறையை ஆய்வு செய்து உரமிடுதல் குறித்தும் விளக்கினார்.

மண் ஆராய்ச்சி நிலையம் வேளாண்மை அலுவலர் செல்வமூர்த்தி, மண்வளத்தை பேணிக்காக்கும் முறைகளையும் மண்ணில் உள்ள சத்துகளை கண்டறிய எவ்வாறு மண் சேகரிப்பது மற்றும் அதனை மண் ஆராய்ச்சி நிலையத்திற்கு எவ்வாறு கொண்டு செல்வது குறித்த தகவல்களையும் மண்வள அட்டையின் முக்கியத்துவத்தை தெளிவாக விளக்கினார். ராதிகா, உதவி வேளாண்மை அலுவலர் வேளாண்மை துறை சார்ந்த திட்டங்களை விளக்கினார். மு.சசிகலா, வட்டார தொழில்நுட்ப மேலாளர் உழவன் செயலியில் தமிழ் மண்வளத்தில் மண்வள தகவல்கள் எவ்வாறு பெறுவது குறித்த செயல் விளக்கம் அளித்தார். உயிர் உரங்களின் முக்கியத்துவத்தை செயல் விளக்கம் மூலம் விளக்கினார். நர்மதா, ஜெயபிரகாஷ், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பண்ணை பள்ளி நிகழ்ச்சி நடைபெற உறுதுணையாக விளங்கினார்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.